ජනමාධ්‍ය අමාත්‍යාංශය
வெகுசன ஊடக அமைச்க
Ministy of Mass Media

සැලසිනෙ
செலசினெ
SELACINE
SELACINE TELEVISION INSTITUTE

# 2020

## வருடாந்த அறிக்கை

கௌர வெகுசன ஊடக அமைச்சர்
வெகுசன ஊடக அமைச்சு
கொழும்பு 05.

கௌரவ அமைச்சர் அவர்களே,

**ஆண்டறிக்கை - 2020**

1971 38 ஆம் இலக்க நிதி சட்டத்தின் 14 (1) பிரிவுக்கமைய 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கையை செலசினெ தொலைக்காட்சி நிறுவனம் சார்பாக என்னால் இத்தால் சமர்ப்பிக்கப்படுகின்றது.

ஹரித் குணவர்தன
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| தூரநோக்கு, பணி, நோக்கம் | 05 |
| தலைவரின் மதிப்புரை | 07 |
| நிறுவனத்தின் தகவல்கள் | 08 |
| நிர்வாக கட்டமைப்பு 2020 மற்றும் தொடர்பு கொள்ளும் விபரங்கள் | 09 |
| ஆண்டறிக்கை - 2020 | 13 |
| நிதியறிக்கைக்கான குறிப்புகள் | 16 |
| வருமான அறிக்கைகள் | 18 |
| ஐந்தொகை | 19 |
| காசுப்பாய்ச்சல் கூற்று | 20 |
| நிதியறிக்கைக்கான கூற்று | 22 |
| 2020 ஆம் ஆண்டின் நிதி தொழிற்பாடுகள் தொடர்பான கணக்காய்வாளர்களின் கருத்துக்கள் | 31 |

# தூரநோக்கு, பணி, நோக்கம்

## பணி

நிபுணத்துவத்துக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றல் மிக்க மனிதவள உதவியுடன் படைப்பாற்றல் மிக்க, திட்டமிட்ட மற்றும் உயர் மட்டத்திலான தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி அரச நிறுவனங்களுக்காக கட்புல, செவிபுல தொடர்பாடல் மற்றும் வேறு படைப்பாற்றல் மிக்க பிரச்சார சேவைகளை வழங்குவதன் மூலம்

## தூரநோக்கு

அரச இயந்திரத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாட்டு மற்றும் அனைத்து வியாபாரத்துறைகளினதும் வளர்ச்சியினை படைப்பாற்றலுடன் விளம்பரப்படுத்துவதன் மூலம் விளம்பரத்துறையின் முன்னோடியாதல்



## நோக்கம்

நிதி நிலமையினை உயர்த்துதல்

சந்தை இலாபத்தினை உயர்த்துதல்

நிறுவன காலாசாரத்தினை உயர்த்துவதற்கான உபாயங்களை செயற்படுத்தல்

நிறுவன ஊழியர்கள் மற்றும் தலைவர்களை வளர்ச்சியுறச் செய்தல்



# தலைவரின் மதிப்புரை

நான் செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் தலைவரான பின்னர் நிறுவனத்தால் வெளியிடப்படும் இரண்டாவது ஆண்டறிக்கை இதுவாவதுடன், மேலும் 2020 ஆம் ஆண்டு தொடர்பான தகவல்களை வெளியிடு தொடர்பில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்.

கடந்த 38 ஆண்டு காலத்தை திரும்பிப் பார்க்கும்போது, பல்வேறு தடைகளை கடந்து நிறுவனம் முன்னோக்கி வெற்றிகரமாக நகர்ந்துள்ளது என்பது தெளிவாகத் தெரிகின்றது. 2020 ஆம் ஆண்டில், கொவிட் தொற்றுநோயின் சூழ்நிலையுடன் நிறுவனம் பல சவால்களை எதிர்கொண்டுள்ளது.

இந்நிறுவனம் 2020 ஆம் ஆண்டு வருமானமாக 233.8 மில்லியன் ரூபாவை ஈட்டிய போதிலும், நாட்டில் ஏற்பட்டுள்ள தொற்றுநோய் நிலைமை காரணமாக, அந்த வருடத்தில் இலாபத்தை ஈட்டுவது மிகவும் கடினமான பணியாக இருந்தது. அதன்படி, 29.3 மில்லியன் ரூபா நஷ்டத்தைக் காட்டி நிறுவனத்தில் பின்னடைவு காணப்பட்டது. நாட்டின் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களே அதற்கு முக்கிய காரணியாகக் காணப்படுகின்றது.

அரசாங்கத்தின் ஒரே விளம்பர நிறுவனமான செலசினே தொலைக்காட்சி நிறுவனம் வழங்கப்பட்டுள்ள பொறுப்புகளை சரியாக நிறைவேற்ற ஒன்றிணைந்து இலக்கை அடைந்து வெற்றி பெறுவதே எமது நோக்காகும்.



ஹரித் குணவர்தன
தலைவர்
செலசினே தொலைக்காட்சி நிறுவனம்.

# நிறுவனத் தகவல்கள்

## பெயர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

## சட்டக்கட்டமைப்பு மற்றும் கடந்தகால நிலைமை

- 1982 பெப்ரவரி 01 ஆம் திகதி திட்டங்களை செயற்படுத்தும் அமைச்சின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.
- 1982-1989 வரை காணி, நீர்ப்பாசன மற்றும் மகாவெலி அபிவிருத்தி அமைச்சின் கீழிருந்த அரச மரக்கூட்டுத்தாபனத்தின் மனித மற்றும் நிதி வளத்தின் கீழ் மகாவெலி உடனடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக இலங்கை மக்களை தெளிவுபடுத்தும் பணியினை மேற்கொண்டது.
- 1989 ஜனசவிய நிகழ்ச்சித்திட்டத்தினை விளம்பரப்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டது
- 1989.08.19 ஆம் திகதியுடைய 832/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் செலசினெ நிறுவனம் இளைஞர் விவகாரங்கள், விளையாட்டு மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது. (இது நிறுவனம் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் மூலம் மேற்கொள்ளப்பட்ட முதல் சுவீகரித்தலாகும்).
- 1997.06.09 ஆம் திகதியுடைய 979/2 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தபால், தொலைத்தொடர்புகள் மற்றும் ஊடக அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2001.12.20 ஆம் திகதியுடைய 1215/14 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்கள் தொடர்பாடல் அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டது.
- 2004.04.28 ஆம் திகதியுடைய 1338/9 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் தகவல் மற்றும் ஊடக அமைச்சின் கீழுள்ள நிறுவனமாக பெயரிடப்பட்டது.
- 2005.12.08 ஆம் திகதியுடைய 1422/22 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் ஊடக மற்றும் தகவல் அமைச்சின் கீழ் நிறுவனமாக ஸ்தாபிக்கப்பட்டது.
- 2007 07 ஆம் இலக்கமுடைய நிறுவன சட்டத்தின் உள்ளடக்கங்களுக்கு அமைவாக பூரண அரசுடைமையான பொதுநிறுவனமாக மாற்றுவதற்காக அமைச்சரவைக்கு 2008.03.26 ஆம் திகதி கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

## நிறுவனத்தின் பொறுப்புக்கள்

- அரசின் ஊடக விளம்பரப்படுத்தல் மற்றும் தயாரிப்பு நிறுவனமாக செயற்படுதல்
- 2005.05.16 ஆம் திகதி 1380/15 இலக்கமுடைய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் கீழ் காட்டப்பட்டுள்ள பணிகள் நிறுவனத்தின் விடயப்பரப்பில் உள்ளடக்கப்பட்டது.
  - i. அச்சு/இலத்திரனியல் விளம்பர தயாரிப்பு
  - ii. அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்கள் தொடர்பாக பொது மக்களை தெளிவுபடுத்தும் பிரச்சாரப்பணிகள்
  - iii. அரச பிரச்சார நிகழ்ச்சிகளை தயாரித்தல்
- 2008.12.02 ஆம் திகதியுடைய வெகுசன ஊடக மற்றும் தகவல் அமைச்சர் கடிதம் சம்பந்தப்பட்ட பரீட்சிப்பின் பின்னர் 2008.12.24 ஆம் திகதியுடைய 08/2253/338/043 இலக்கமுடைய அமைச்சரவை பத்திரத்தின் ஊடாக அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள நிறுவனங்களின் அனைத்து விளம்பரங்கள் மற்றும் பிரச்சார நிகழ்ச்சிகளை செலசினெ தொலைக்காட்சி நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளவதை கட்டாயமாக்கும் அனுமதியை பெற்றுக்கொடுத்தது
- தொலைக்காட்சி ஆவண நிகழ்ச்சிகள், வானொலி நிகழ்ச்சிகள் உட்பட தொலைக்காட்சி மற்றும் வானொலி விளம்பரங்கள் போன்ற கட்புல செவிபுல தயாரிப்புக்களை மேற்கொள்ளுதல்
- பத்திரிகை விளம்பரத்தயாரிப்பு உட்பட விளம்பரங்னை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் ஒழுங்குபடுத்தல்.
- நிகழ்ச்சி முகாமைத்துவம் மற்றும் அச்சு வேலைகள்.

# நிர்வாகக் கட்டமைப்பு - 2020

## சிரேஷ்ட முகாமைத்துவம்

| | | | |
|---|---|---|---|
| எச். எம். லக்ஷ்மன் டி சொய்சா | - | தலைவர் (வே.பா) | (2019.12.13) |
| எஸ்.ஏ.ஆர்.என்.சுபசிங்ஹ | - | தலைவர் | (2020.08.13 - 2020.12.15) |
| தேசபந்து அமில மொரேமட | - | தலைவர் | (2020.12.17 - 2021.12.29) |
| எச். எம் மஞ்சுள ஹேரத் - பொது | | முகாமையாளர் | |

## நிர்வாகிகள்

| | | | |
|---|---|---|---|
| திருமதி. பீ. செவ்வந்தி | - | முகாமையாளர் | (மனிதவளம் மற்றும் நிர்வாகம் வே.பா) |
| சுனந்த வீரசிங்க | - | முகாமையாளர் | (ஒலி / ஒளி தயாரிப்பு) |
| அக்போ அமரசேகர | - | பணிப்பாளர் | (வாடிக்கையாளர் சேவை) |
| நலீன் அலஹகோன் | - | முகாமையாளர் | (ஊடகப்பிரிவு) |
| டப்.எம்.எம்.பி.எச்.குணரத்ன | - | கணக்காளர் | |
| சுஜித் புஷ்பகுமார | - | முகாமையாளர் | (வரைகலைப்பிரிவு) |
| அய்.எல்.பீ.பிரனாந்து | - | முகாமையாளர் | (அதிவேக அச்சிடல்) |
| பிரபாத் கஹாதுவ ஆராச்சி | - | முகாமையாளர் | (நிகழ்ச்சிகள்) |
| இந்திக விஜேதுங்க | - | முகாமையாளர் | (கொள்வனவு மற்றும் விநியோகித்தல்) |

## தணிக்கை

அரச கணக்காய்வாளர் அதிபதியின் திணைக்களம்

## வங்கியாளர்

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

## தொடர்பு விபரங்கள்

| | | |
|---|---|---|
| **முகவரி** | - | இல. 380/57, சரன வீதி, கொழும்பு 07 |
| **தொலைபேசி** | - | 011-4320777, 011-4061586 |
| **தொலைநகல்** | - | 011-2058229 |
| **மின்னஞ்சல்** | - | selacine@gmail.com |
| **இணையத்தளம்** | - | www.selacine.lk |

# நிர்மான மற்றும் வரைக்கலை பிரிவு

விளம்பரத்துறையில் வரைக்கலை படைப்பு பணியானது போட்டிகரமான பிரிவாவதோடு புத்தாக்கத்தினுள் செயற்படுவதால் மிகவும் பயனுள்ள பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய ஒரு துறையாகும். செலசினே நிறுவனத்தினுள் புத்தாக்க மற்றும் வரைக்கலைப் பிரிவானது செலவிடப்பட்ட நேரமானது ஏனைய உப பிரிவுகளது பணிகளின் வெற்றிக்குப் பின்னால் அமைந்துள்ள வரைக்கலைப் பிரிவின் முயற்சியாகும்.

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் விளம்பரப்படுத்தல்கள், செய்தி விளம்பரங்கள், பில் போட், கையேடுகள் உட்பட ஏராளமான புத்தாக்க செயற்பாடுகள் அன்றாடம் எமக்கு வழங்கப்படும் பணிகளாகும். இதன்போது புத்தாக்கம், புதிய தொழில்நுட்ப அறிவு என்பவற்றுடன் புதிய படைப்புகளை வழங்கி நிறுவனத்தின் முன்னோக்கிய பயணத்திற்கு உறுதுணையாக இருக்கும் குழுவினராக இருப்பதற்கு நிர்மாண மற்றும் வரைக்கலைப் பிரிவு குழுவினர் தமது உயர்ந்த பங்களிப்பை என்றும் வழங்குவர்.

விளம்பரத்துறையில் முன்னோக்கி செல்வதற்கு போட்டியும் புத்தாக்கமும் புதிய தொழில்நுட்ப உத்திகளும் அவசியம். முக்கியமாக கொவிட் நோய்த்தொற்று காலப்பகுதியிலும் நிறுவனத்தின் ஏனைய பிரிவுகளின் பணிகளுக்கு உதவி வழங்கியதோடு கடுமையான சவால்களை கடந்து இலக்கை அடைவதற்கு எமது பிரிவினர் பெற்றுக்கொடுத்த ஒத்துழைப்பினால் வெற்றியை அண்மித்தமைக் குறித்து மகிழ்ச்சியடைகின்றோம்.

வரைக்கலைப் பிரிவினர் உரிய பணி நேரத்திற்கான கால வரையறையைக் கொண்டவர்கள் கிடையாது. ஆகவே நிறுவனத்தின் வளர்ச்சிக்காக புத்தாக்க செயன்முறையை தக்கவைத்து அதன் ஊடாக தமது பெரும் பங்களிப்பை வழங்கி வருகின்றது.

புதிய நிர்வாகத்துடன் கைக்கோர்த்து, உயர் குழாமின் அறிவுரைகளுக்கேற்ப செய்றபடும் ஒரு பிரிவாக வருடாந்த இலக்கை அடைவதற்கு தமது உயர் பங்களிப்பை வழங்குவதற்காக புத்தாக்க மற்றும் வரைக்கலைப் பிரிவு என்றும் இணைந்திருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

# ஊடகப்பிரிவு



ஊடகப்பிரிவின் பிரதான செயற்பாடானது இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் விளம்பரப்படுத்தல் மற்றும் காட்சி வடிவமைப்பு செயற்பாடுகளை அட்டணையிடல் மற்றும் சமூக ஊடகங்களில் விளம்படுத்தல் என்பனவாகும். அது அனைத்து ஆண்டுகளிலும் அதிக இலாபத்தை கொண்டுவரும் ஒரு பிரிவாக இருப்பது அட்டவணையிடல் மூலமேயாகும். அதற்கேற்ப 2020ஆம் ஆண்டிலும் கொவிட் நோய்த்தொற்றின் போதும் ஊடகப்பிரிவு அதன் பணியை சிறப்பாக செயலாற்றியது. இதன்போது மொத்த முதலீடு 178,035,800 ரூபா மில்லியனாகும்.

மேலும் தொலைக்காட்சி மற்றும் வானொலி உப அட்டவணைப்படுத்தலுக்காக எமக்கு விசேட கழிவு விகிதம் கிடைப்பதோடு இதற்கு மேலதிகமாக தற்பொழுது சமூக ஊடக வலையமைப்பு இணையம் வாயிலாக விளம்பரப்படுத்தல் மிகவும் கவர்ச்சிகரமான செயலாக மாறியுள்ளது. அதற்கேற்ப எமது ஊடகப்பிரிவில் சமூக ஊடகப்பிரிவு வேறாக அமைந்துள்ளது. அங்கு எமது புத்தாக்கமான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தப்படும்.

அதன்படி இலங்கையின் முதல்தர விளம்பர முகவர் நிறுவனம் என்ற அடிப்படையில் எமது புத்தாக்க செயற்பாடுகள் மட்டுமல்லாமல் விளம்பரத்திறனில் அதி உயரிய நிலையை செலசினே தொலைக்காட்சி நிறுவனம் தன்வசம் கொண்டுள்ளது.

# விற்பனை மற்றும் வாடிக்கையாளர் சேவைப்பிரிவு

2020 ஆம் ஆண்டு வாடிக்கையாளர் பிரிவிற்கு ஒரு சவாலான ஆண்டாக இருந்தது, மேலும் நாட்டில் தொற்றுநோய் நிலைமைகள் காரணமாக பல நிறுவனங்கள் மூடப்பட்ட நிலையில், நமது வர்த்தக இலக்குகளை அடைவது கடினமான சூழ்நிலையாக இருந்தது. இந்தப் பின்னணியில், மொத்த விற்பனை வருவாய் ரூ. 233,865,842 பெற முடிந்ததும் சாதனைதான்.

இங்கே, செய்தித்தாள் மின்னணு ஊடக திட்டமிடல் மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ரூ. 178,035,800 மற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவத்தின் மூலம் வருமானத்தில் சில நியாயமான வருமானங்கள் காட்டப்பட்டுள்ளன.

மேலும், வரைகலை மற்றும் அச்சிடல் வருவாயில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதை ஒரு சிறப்பு என்று கருதலாம்.

## மனிதவள மற்றும் நிர்வாகப்பிரிவு

மனித வளம் மற்றும் நிர்வாகப்பிரிவு என்பது ஒரு அமைப்பின் இதயத் துடிப்பாகும். தினசரி நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவ கடமைகளுக்கு மேலதிகமாக, இப் பிரிவானது 2020 ஆம் ஆண்டிலும் நிறுவனத்தின் ஊழியர்களின் நலனுக்காக பல சேவைகளை முன்னோக்கி கொண்டு வர முடிந்தது. சிறந்த முறையில் மற்றும் கொவிட் தொற்றுநோய்களின் போது பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்து ஒரே குழுவாக பணியாற்றுதல் மூலம் சிறப்பாக செயற்பட்டது.

- கடந்த ஆண்டில், எங்கள் பிரிவினால் அலுவலர்களின் பங்களிப்புடன் பயிற்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளோம்.
- ஒட்டு மொத்த ஊழியர்களின் மகத்திடத்தை விருத்தி செய்யவும், முன்னேற்றத்தை அடையவும் ஒரு ஒன்றுகூடலை ஏற்பாடு செய்தோம்.
- ஊழியர்கள் தங்கள் கடமைகள் தொடர்பான அறிவைப் புதுப்பிக்கும் நோக்கத்திற்காக பயிற்சி வகுப்புகளுக்கு பரிந்துரைக்கப்பட்டனர்.
- பணியாளர் நலத்திட்டத்தை மேலும் வலுப்படுத்தப்பட்டது.
- விற்பனைத் துறையை மேம்படுத்தும் பணியில், பகுதி நேர விற்பனைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டு, நிறுவனத்தின் நிதித் துறையை வலுப்படுத்த தேவையான அறிவுறுத்தல்கள் செயல்படுத்தப்பட்டன.
- கொவிட் தொற்றுநோய்களின் சூழ்நிலையிலும் அனைத்து அதிகாரிகளுக்கும் சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவுகள் மற்றும் போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் நிர்வாக செயல்முறையை சுறுசுறுப்பாக வைத்திருக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அரசாங்கத்தின் விளம்பர முகவர் என்ற வகையில் எமது கூட்டுப் பொறுப்புகளையும், கடமைகளையும் புரிந்துகொண்டு பொதுவான இலக்குடன் முன்னோக்கிச் செல்ல எமது திணைக்களம் உயர்மட்ட நிர்வாகத்துடன் கைகோர்த்துச் செயற்படுகின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## தயாரிப்பு பிரிவு

செலசினே நிறுவனத்தின் செயற்பாட்டு இருதயமாக தயாரிப்புப் பிரிவினைக் குறிப்பிட்டால் அது மிகவும் பொருத்தமாக இருக்கும். அரசின் அபிவிருத்தி செயற்றிட்டங்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காக புதுவிதி நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்தும் பணிகள் ஆரம்பத்தில் எமது பிரிவுக்கு வழங்கப்பட்டிருந்த பணிகளாகும். கடந்த 40 வருடங்களுள் தயாரிப்புப் பிரிவானது மிகச்சிறப்பாக செயற்பட்டதோடு செலசினே நிறுவனத்தின் விற்பனை விளம்பரப்படுத்தல் ஆக்கங்கள், புதிய நிகழ்ச்சிகள், தொலைக்காட்சி நாடக அமைப்பில் ஈடுபட்டு முன்னேற்றப் பாதையில் செல்வதற்கு தயாராகியது. அத்துடன் அரசின் காலத்தேவைக்கேற்ப நவீன தொழில்நுட்பம் ஊடாக போட்டிகரமாக தரமான உயர்ந்த நிகழ்ச்சிகளை புத்தாக்கத்துடன் தயாரித்தல் போன்றவை வரையிலான அடிகளை வைத்து நிறைவுப் பெற்றுவிட்டது.

2020ஆம் ஆண்டு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரச்சபைக்காக புதிய திரைப்படமொன்று உருவாக்கியமை எமது செயற்பாடுகளில் ஒன்றாகும். மனித பலம் மற்றும் வேலைவாய்ப்பு திணைக்களத்திற்காக சிறிய வியாபாரங்களை ஊக்குவிப்பதற்காக புதிய நிகழ்ச்சிகள் 75 வெற்றிகரமாக உருவாக்கப்பட்டு நிறுவனத்தின் நிதியியல் வெற்றிக்கு பங்களிப்புச் செய்தது.

கொவிட் நோய்த்தொற்றின் போது நாடு முகங்கொடுத்த அசாதாரண சூழலிலும் தயாரிப்புப் பிரிவானது செயற்பட்டுக்கொண்டிருந்ததோடு நிறுவனத்தின் தேவைகள் மற்றும் அரசின் விளம்பரப்படுத்தல் செயற்பாடுகளுக்கு தமது உயர்ந்த பங்களிப்பை வழங்கியுள்ளோம்.

தயாரிப்புப் பிரிவானது இதன்பொழுது மேலும் பலமாக மற்றும நவீன அறிவு மற்றும் தொழில்நுட்பத்துடன் இணைந்து முன்னோக்கிப் பயணித்திட தயாராகவுள்ளது.

## நிதிப்பிரிவு

2020 ஆம் ஆண்டு கொவிட் தொற்றுடன் ஆரம்பிக்கப்பட்டாலும், கணக்கியல் பணியை மிகவும் திறம்பட மேற்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எமது பிரிவான செலசினே நிறுவனத்தின் நிதிப்பிரிவு மேற்கொண்டது. பல்வேறு சிரமங்களுக்கும் தடைகளுக்கும் மத்தியிலும் இவ்வருடம் அதன் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு தேவையான வரவுகளை கணினி மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. கடந்த ஆண்டை விட 2020 ஆம் ஆண்டில், கணக்கியல் பணியை மீட்டெடுக்க அதிக முயற்சிகள் எடுக்க வேண்டியிருந்தது. அனைத்து கணக்கீடுகளும் அரசாங்க கணக்கியல் தரத்தின்படி மேற்கொள்ளப்பட்டன. நிலுவையில் உள்ள பல கடன்கள் சரியான நேரத்தில் வழங்குனர்களுக்கு செலுத்தப்பட்டன. நிலுவைத் தொகையை வசூலிக்கும் திட்டமும் தயாரிக்கப்பட்டது.

மேலும், கணக்கியல் அறிக்கைகளைத் தயாரிக்கவும், அமைச்சகம் மற்றும் கணக்காய்வுக்கு தகவல்களை உடனடியாக வழங்கவும், அரசாங்க வணிகத் துறைகள் போன்ற பங்குதாரர்களுக்கு உடனடியாக தகவல்களை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2014, 2015, 2016, 2017, 2018, 2019 ஆண்டுகளை போன்றே மீண்டும் ஒரு முறை 2020.12.31 முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயல்பாடு மற்றும் நிதிச் செயல்பாடுகள் குறித்து தணிக்கை அதிபரின் கருத்து வெளியிட்டது குறிப்பிடத்தக்க சாதனையாகும். பணப்புழக்க அறிக்கையானது பொதுக் கணக்கியல் கொள்கைகளுக்கு ஏற்ப உண்மையான மற்றும் நியாயமான சூழ்நிலையைக் காட்டுகிறது.

## நிகழ்ச்சி முகாமைத்துப்பிரிவு

செலசினே தொலைக்காட்சி நிறுவனத்தின் நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவானது நிறுவனத்தில் அதிகளவு வருமானத்தை விரைவாகப் பெற்றுக்கொள்வதற்கு பங்களிக்கும் ஒரு பிரிவாக தற்பொழுது மாறியுள்ளது. புதிய இலக்குடன் புதிய செயன்முறைகளில் நிகழ்ச்சி முகாமைத்துவத்தை புதிய கோணத்தில் முன்வைப்பதற்கு தற்பொழுது பணியாற்றும் நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவு தேர்வாகியுள்ளது. ஆண்டுதோறும் விசாலமான வருவாயை ஈட்டுள்ள நிகழ்ச்சி முகாமைத்துவப் பிரிவானது இவ்வருடம் கடுமையான சவால்களை சந்திக்க நேர்ந்தது. எமது நிறுவனத்தால் மேற்கொள்வதற்கு திட்டமிருந்த ஏராளமான நிகழ்ச்சிகள் கொவிட் நோய்த்தாக்கத்தாலும் சுகாதார பிரிவினால் முன்மொழியப்பட்ட வழிக்காட்டல்களையும் கருத்திற்கொண்டு நிறுத்து வைப்பதற்கு தீர்மானித்தது. முழுதாக நாட்டை முடக்குதல் மற்றும் போக்குவரத்து தடையைப் போன்று சுகாதார சட்டதிட்டங்களை கௌரவிக்கும் முகமாக எமது நிறுவனமானது நிகழ்ச்சிகளை முகாமைத்துவம் செய்வதை தற்காலிகமாக நிறுத்தியது.

கோவிட் 19 நோய்த்தொற்றானது கட்டுப்பாட்டுக்குள் வந்த பின்னர் எமது நிறுவனமானது மீண்டும் நிகழ்ச்சி முகாமைத்துவத்தில் ஈடுபடுவதோடு எம்முடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளும் அரச மற்றும் தனியார் பிரிவு நிறுவனங்களுடன் ஒன்றாக இணைந்து மீண்டும் நிகழ்ச்சி முகாமைத்துவத்தை மேற்கொண்டு வருவாயை ஈட்டுவதற்கான திட்டங்களை கலந்தாலோசித்து 2020 ஆம் ஆண்டுக்கான வருவாயை மேலும் மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு செயற்படவுள்ளோம்.

# நிதியறிக்கை 2020

வருமான வளர்ச்சி






கடந்த 05 வருடங்களினுள் வருமானம் மற்றும் செலவு



## 2016 - 2020 ஆம் வருடங்களுக்கிடையில் நிறுவனத்தின் இலாபப்போக்கு

5 ஆண்டு காலத்தில் வருமானம் மற்றும் நேரடி செலவுகளின் போக்கு



# நிதி அறிக்கைக்கான குறிப்புக்கள்

**2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான**

**1. பொதுவானவை**

1.1 நிறுவனத் தகவல்கள்

செலாசினெ தொலைக்காட்சி நிறுவனமானது (இதன் பின்னர் செலாசினே என்று அழைக்கப்படும்) 2019.02.26 ஆம் திகதி இல 2112/13 எனும் இலக்கமுடைய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிதி மற்றும் வெகுசன ஊடகத்துறை அமைச்சின் விடயதானத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

1.2 பிரதான செயற்பாடுகள் மற்றும் நடவடிக்கைகளின் தன்மை

நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகள் விளம்பரப்படுத்தல், தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு மற்றும் நிகழ்ச்சி ஒழுங்கமைப்பு என்பனவாகும்.

1.3 ஊழியர்களின் எண்ணிக்கை

2020.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு 54 ஊழியர்கள் பணியாற்றியுள்ளார்கள்.

**2. கணக்கியல் கொள்கை தொடர்பில் முக்கிய அம்சங்களின் சாராம்சம்**

2.1 பொதுவான கொள்கைகள்

இந் நிதிக்கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டதாகும். இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ள நிதிசார் கூற்றுக்கள் தொடர்ந்து இயங்கும் நிறுவனம் என்ற அடிப்படையில் தயாரிக்கப்பட்டது.

2.2 நிலைத்தன்மை மற்றும் ஒப்பீடு

இவ் வருடத்தில் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைள் முந்திய வருடங்களில் பின்பற்றப்பட்ட கணக்குக் கொள்கைகளுடன் இணக்கப்பாடானதாக உள்ளது.



2.3 கடன் செலவுகள

கடன் செலவுகள் அவை மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதியில் எந்தத் தொகையும் மூலதனமாக்கப்படாது செலவினமாக இனங்காணப்பட்டுள்ளது.

**3. சொத்து மதிப்பிடுதலும், அவை மதிப்பிடும் அடிப்படையும்**

3.1 ஆதனங்கள், பொறித் தொகுதி மற்றும் சாதனங்கள்

செலவு அல்லது அளவு மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனங்கள், பொறித்தொகுதி மற்றும் சாதனங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன.

3.2 வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை

வியாபார மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவை மதிப்பிடப்பட்ட தீர்வைப் பெறுமதி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3.3 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானைவும் என்பது கையிலுள்ள காசு மற்றும் கோரிக்கை வைப்புக்களையும், துரித கதியில் தெரிந்த பெறுமானத்தில்காசுக்கு மாற்றக்கூடியதாகவும், பெறுமான மாற்றத்தில் குறிப்பிடப்பட்ட தீங்கெதனையும் விளைவிக்காததும், கூடிய திரவத் தன்மையுடைய குறுகிய கால முதலீடுகளுமாகும்.

3.4 தேய்மானம்

தேய்மானமானது ஒவ்வொரு சொத்தினதும் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டுக் காலப் பகுதிக்குள்ளானவாறு நேர்கோட்டு முறையின் பிரகாரம் வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுள்ளது. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள், குத்தகைக் காலப் பகுதியின் குறுகிய காலத்திற்கும், சமமான சொந்தச் சொத்துக்களின் பயன்பாட்டு காலப் பகுதிக்கும் ஏற்ப தேய்மானம் செய்யப்பட்டுள்ளன. நிலையான சொத்துக்களுக்குரிய தேய்மான விகிதம் திருத்தப்பட்டுள்ளது.

சமகால மற்றும் ஒப்பீட்டளவு காலப் பகுதிக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பயன்பாட்டு காலம் வருமாறு:

| | |
|---|---|
| தளபாடங்களும் பொருத்துதலும் | 10 வருடங்கள் |
| கணனி சாதனங்கள் | 05 வருடங்கள் |
| அலுவலக சாதனங்கள் | 10 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 05 வருடங்கள் |
| புகைப்படக் கருவி, படமெடுக்கும் சாதனங்கள் | 10 வருடங்கள் |
| கணனி மென்பொருட்கள் | 10 வருடங்கள் |

**4. பொறுப்புக்களும், ஒதுக்கீடுகளும்**

4.1 ஐந்தொகை தினத்திலிருந்து ஒரு வருட காலத்திற்குள் செலுத்தவேண்டியவை அல்லது கோரிக்கை அடிப்படையில் செலுத்தவேண்டிய கடப்பாடுகள் என்பன நடைமுறைப் பொறுப்புக்களென ஐந்தொகையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஐந்தொகைத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குப் பின்னர் முடிவடையவுள்ள கடப்பாடுகள் நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

4.2 ஓய்வூதிய, நலன்புரி செலவுகள்

ஊழியர்கள் பிரதிலாபங்கள் - LKAS 19 (2006 இல் திருத்தப்பட்டது) ஊழியர் நலன்புரிக்கமைய சகல ஊழியர்களுக்கும் சேவையின் முதலாவது வருடத்திலிருந்து ஓய்வூதிய நலன்புரிகளுக்கான ஒதுக்கம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் 1983 ஆம் ஆண்டு 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டத்திற்கமைய தொடர்ச்சியாக 05 வருட சேவையினைப் பூர்த்திசெய்த பின்னரே ஊழியர் ஒருவருக்கான பொறுப்பு ஏற்புடையதாகிறது.

4.3 நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள் - ஊ.சே.நி மற்றும் ஊ.ந.நி

நியதிச் சட்டங்களுக்கும் பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள், ஊழியர் சேமலாப நிதி பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிய பங்களிப்புகளுக்கு தகுதியுடையவர்களாவார்கள். இந் நிறுவனமானது ஊழியர்களின் மொத்த வேதனாதிகளின் 15% மற்றும் 3% க்கான தொகையினை முறையே ஊழியர் சேமலாப நிதியத்திற்கும், ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கிறது.

**5 வருமானக் கூற்று**

5.1 மொத்த விற்பனவு

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அச்சிடுதல், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்..

5.2 வருமானம் இனங்காணல்

செலசினெயின் மொத்த விற்பனையானது கலை வேலைப்பாடுகள், அட்டவணைப்படுத்தல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சிகள் தயாரிப்பு, நிகழ்வு முகாமைத்துவம், மற்றும் சமூக ஊடகங்களிலிருந்து பெறப்படுகின்றவையாகும்.

5.3 செலவு இனங்காணல்

வருமானக் கூற்றில் செலவுகளானது ஏற்பட்ட செலவுக்கும், வருமானத்தின் குறிப்பிட்ட விடயங்களுக்கான உழைப்பிற்கும் இடையிலான நேரடித் தொடர்பின் அடிப்படையில் இனங்காணப்பட்டுள்ளது.

**6. சம்பந்தப்பட்ட நபர்களுடனான கொடுக்கல் வாங்கல்**

நிதிக்கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பகுதியில் எந்தவொரு சம்பந்தப்பட்ட நபர்களுடனும் எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் செய்யப்படவில்லை.

**7. ஐந்தொகைத் திகதியின் பின்னர் இடம்பெறும் நிகழ்வுகள்**

ஐந்தொகைத் திகதியின் பின்னர் நிதிக் கூற்றுக்களில் சீராக்கல்களையோ, வெளிப்படுத்தல்களையோ செய்யவேண்டிய அளவிலான நிகழ்வுகள் இடம்பெறவில்லை.

**8. இலங்கை மத்திய வங்கியின் அறிவுறுத்தல்களின்படி பிரமுக வங்கியில் வைப்பிலிடப்பட்டிருந்த ரூபா 300,000 இலங்கை வங்கி சேமிப்பு கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளது.**

**9. அறவிடமுடியாத மற்றும் ஐயமான கடன்பட்டோருக்காக 2.5% மும், இனங்காணப்படாத கடன்பட்டோர் ஆண்டு 2006 க்காக முழுமையயாகவும் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.**

**10.** **10.1** இரண்டு ஊழியர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**10.2** இங்கு குறிப்பிடப்பட்ட கணக்காய்வு கோரிக்கைகளுக்கு நிறுவனத்தின் சொத்துக்கள் 2020 இல் மதிப்பீடு செய்யப்பட்டு இறுதிக் கணக்கில் பதிவு செய்யப்படும்.

# வருமான அறிக்கை

**2020 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடைந்த வருமான அறிக்கை இலங்கை ரூபாவின் படி**

| | குறிப்புகள் | 2020<br>ரூபா. | 2019<br>ரூபா. |
|---|---|---|---|
| வருமானம் | **11** | **233,865,842** | **634,368,092** |
| நேர் செலவுகள் | **12** | 189,135,680 | 533,238,084 |
| **மொத்த இலாபம் / நட்டம்** | | **44,730,162** | **101,130,008** |
| ஏனைய வருமானம் | **13** | 6,574,534 | 7,732,399 |
| நிர்வாக மற்றும் ஸ்தாபனச் செலவுகள் | **14** | (68,760,032) | (76,773,888) |
| விற்பனை மற்றும் விநியோக செலவுகள் | **15** | (10,891,597) | (20,379,231) |
| **நடைமுறையிலிருந்து இலாபம்** | | **(28,346,933)** | **11,709,288** |
| நிதிசார் மற்றும் ஏனைய செலவுகள் | **16** | (116,795) | (196,806) |
| ஏனைய செலவுகள் | **17** | (875,865) | (3,212,272) |
| **வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம்.்.நட்டம்** | | **(29,339,593)** | **8,300,209** |
| வருமான வரி | | - | - |
| **வரிவிதிப்புக்கு பின்னரான தேறிய இலாபம்.்.நட்டம்** | | **(29,339,593)** | **8,300,209** |

# ஐந்தொகை

31 டிசம்பர் 2020 அன்று உள்ளவாறான

| | குறிப்புகள் | 2020 ரூபா. | 2019 ரூபா. |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் | 18 | 6,816,245 | 8,819,372 |
| தொட்டுணர முடியாத சொத்துக்கள் | 18-A | 2,257,876 | 2,908,741 |
| **மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | **9,074,121** | **11,728,113** |
| **நடைமுறை** | | | |
| முதலீடுகள் | 19 | 33,519,646 | 32,398,200 |
| வியாபாரம் கிடைக்கவேண்டியவை | 20 | 300,440,528 | 393,767,769 |
| ஏனைய கிடைக்க வேண்டியவை | 21 | 9,965 | 1,669,896 |
| கையிலும், வங்கியிலும் உள்ள காசு | 22 | 7,542,890 | 27,686,494 |
| **நடைமுறை சொத்துக்கள** | | **341,513,028** | **455,522,359** |
| **மொத்த சொத்துக்கள்** | | **350,587,147** | **467,250,472** |
| **ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | | |
| **ஒப்புரவு** | | | |
| நிறுத்திவைக்கப்பட்ட இலாபம்/நட்டம் | | 99,105,138 | 124,389,548 |
| **மொத்த ஒப்புரவு** | | **99,105,138** | **124,389,548** |
| **பொறுப்புக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாதவை** | | | |
| செலுத்தவேண்டிய பணிக்கொடை | 23 | 16,724,135 | 16,381,707 |
| **மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | **16,724,135** | **16,381,707** |
| **நடைமுறை** | | | |
| வியாபாரமும், செலுத்தவேண்டிய ஏனையவையும் | 24 | 234,628,323 | 326,349,665 |
| பெற்றுக்கொண்ட முற்பணம் | | 129,552 | 129,552 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | **234,757,875** | **326,479,217** |
| **மொத்த ஒப்புரவும், பொறுப்புக்களும்** | | **350,587,147** | **467,250,472** |

1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் பிரகாரமும், இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தினால் ஏற்படுத்தப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமனங்களின் தேவையின் பிரகாரமும் இந்த நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

பொது முகாமையாளர் - செலசினே தொலைக்காட்சி நிறுவனம்

இந்த நிதி அறிக்கை அமைத்தல் மற்றும் முன்வைத்தலுக்கான பொறுப்பு பணிப்பாளர் சபையைச் சாரும் என்பதோடு அதற்காக பணிப்பாளர் சபையினால் கீழ் கையெலுத்திட்டப்பட்டுள்ளது.

தலைவர்

செலசினெ தொலைக்காட்சி நிறுவனம்

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2020<br>ரூபா. | 2019<br>ரூபா. |
|---|---|---|
| **நடைமுறை செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| வரிவிதிப்புக்கு முன்னரான தேறிய இலாபம் | (29,339,593) | 8,300,209 |
| **சீராக்கல்** | | |
| வட்டி வருமானம் | (4,006,227) | (4,035,768) |
| தேய்மானம் | 2,930,251 | 2,897,602 |
| பணிக்கொடைக்கான ஏற்பாடு | 2,656,623 | 4,766,131 |
| வெளியேற்றப்பட்ட ஆதனம் மீதான இலாபம்/நட்டம் | - | (1,376,057) |
| அடகு கடன் ஒதுக்கீடு | (1,181,255) | - |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் | 3,942,103 | 6,297,513 |
| **தொழிற்படுமுதல் மாற்றத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்** | **(24,998,170)** | **16,849,630** |
| வியாபாரம் மற்றும் ஏனைய கிடைக்கவேண்டியவையில் (அதிகரிப்பு/குறைவு) | 94,508,497 | 72,207,298 |
| வைப்புக்கள் மற்றும் முற்செலுத்தப்பட்டவையில் (அதிகரிப்பு/குறைவு) | 1,659,931 | (274,385) |
| வியாபார கடன் மற்றும் பிற கொடுப்பனவுகளின் (அதிகரித்தல்/குறைவடைதல்) | (91,721,340) | (68,136,326) |
| **செயற்பாட்டுக்கு (பயன்படுத்திய) பெறப்பட்ட காசு** | **(20,551,082)** | **20,646,217** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (2,314,195) | (303,818) |
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து/பயன்படுத்திய தேறிய காசு** | **(22,865,277)** | **20,342,400** |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| ஆதனங்கள், பொறித்தொகுதிகள், சாதனங்கள் கொள்வனவு | (276,259) | 1,427,941 |
| வட்டி வருமானம் | 4,006,227 | 4,035,768 |
| நிலையான வைப்புக்கள் | (1,121,446) | (11,500,000) |
| **முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து (பயன்படுத்திய)/தேறிய காசு** | **2,608,522** | **(6,036,290)** |
| **திறைசேரி கடன் கிடைக்கப்பெற்றது/திருப்பி செலுத்தியது** | | |
| குத்தகையில் பிழை திருத்தம் | 113,152 | - |
| **நிதி நடவடிக்கைகளிலிருந்து / பயன்படுத்திய தேறிய காசு** | **113,152** | **-** |
| காசிலும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய குறைவு | **(20,143,603)** | **14,306,109** |
| வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ) | 27,686,494 | 13,380,385 |
| **வருட முடிவில் காசும், காசுக்கு சமமானவையும் (குறிப்பு அ)** | **7,542,890** | **27,686,494** |

# காசுப் பாய்ச்சல் கூற்று

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2020<br>ரூபா. | 2019<br>ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு அ** | | |
| **காசும், காசுக்கு சமமானவையும்** | | |
| இவ. - க.இல. - 2323299 | 1,323,361 | 3,078,298 |
| இவ. - சேமிப்பு க.இல - 2329765 | 326,584 | 327,396 |
| மக்கள் வங்கி 200100130005980 | (18,227,500) | (3,652,842) |
| மக்கள் வங்கி 200100110005980 | 23,638,167 | 27,571,333 |
| தயாரிப்பு முற்பணம் | 276,209 | 141,809 |
| ஏனைய முற்பணம் | 206,070 | 220,502 |
| | **7,542,890** | **27,686,494** |

# ஒப்புரவில் மாற்றங்கள் பற்றிய கூற்று

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | பேணிய இலாபம் | 2020<br>ரூபா. |
|---|---|---|
| 2020 ஜனவரி 01 அன்று மீதி | 124,502,700 | 124,502,700 |
| முன்னைய ஆண்டுகளில் சீராக்கல்கள் - குறிப்பு (28) | 3,942,031 | 3,942,031 |
| | 128,444,731 | |
| ஆண்டில் தேறிய இலாபம் / நட்டம் | (29,339,593) | (29,339,593) |
| **2020 டிசம்பர் 31 ஆம் அன்று மீதி** | **99,105,138** | **99,105,138** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2020<br>ரூபா. | 2019<br>ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு - 11 - வருமானம்** | | |
| தயாரிப்பு | 9,806,793 | 59,618,406 |
| வரைவியல் மற்றும் அச்சு நடவடிக்கை | 32,036,158 | 50,717,766 |
| அட்டவணை தயாரித்தல் | 178,035,800 | 375,524,280 |
| நிகழ்வு முகாமைத்துவம் | 13,957,091 | 148,333,815 |
| நானாவிதமானவை | 30,000 | - |
| வலை வருமானம் | - | 173,825 |
| | **233,865,842** | **634,368,092** |
| **குறிப்பு - 12 - நேரடி செலவுகள்** | | |
| தயாரிப்பு செலவுகள் | 5,585,569 | 38,654,700 |
| வரைவியல் செலவுகள் | 23,800,111 | 36,176,902 |
| அட்டவணை தயாரித்தல் செலவுகள் | 147,427,101 | 316,005,865 |
| நிகழ்வு முகாமைத்துவம் செலவுகள் | 12,322,899 | 142,256,803 |
| வலை செலவுகள் | - | 143,814 |
| | **189,135,682** | **533,238,084** |
| **குறிப்பு - 13 - ஏனைய வருமானங்கள்** | | |
| பணியாளர் கடன் வட்டி | 96,068 | 135,683 |
| வங்கி வட்டி | 3,910,159 | 4,035,768 |
| வராக் கடன் அல்லது அறவே வசூலிக்க முடியாத கடன் | 1,181,255 | 821,491 |
| சொத்துக்கள் விற்பனை (இலாபம்/ நட்டம்) | 13,900 | - |
| ஏனைய வருமானம் | 582,152 | 1,566,457 |
| வழங்குதல் பதிவு | 606,000 | 1,078,000 |
| மொழிப்பெயர்ப்பு கட்டணங்கள் | - | 10,000 |
| கலை வேலை கட்டணங்கள் | 185,000 | 85,000 |
| | **6,574,534** | **7,732,399** |

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

**2020 டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான இலங்கை ரூபாவில் குறிப்பிடப்பட்டுள்ளது.**

| | 2020<br>ரூபா. | 2019<br>ரூபா. |
|---|---|---|
| **குறிப்பு - 14 - நிர்வாக மற்றும் தாபன செலவுகள்** | | |
| கொடுப்பனவுகள் | 271,661 | 17,000 |
| படி - தலைவர் | 552,000 | 1,102,083 |
| படி - ஒப்பந்த சேவைகள் | - | 156,010 |
